**தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை, சென்னை – 18.**

**முன்னிலை : திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப., ஆணையர்.**

ந.க.875/2018/கூதே1 நாள் : 06.01.2023

பொருள் : கூட்டுறவுச் சங்க தேர்தல் 2023 – நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்தல்கள் – துணிநூல் துறை – மாவட்ட தேர்தல் அலுவலர் நியமனம் (District Election Officer) – நியமன ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்தின் கடிதம் ந.க.875/2022/கூதே1, நாள் 12.09.2022.
2. துணிநூல் ஆணையர் அலுவலக ந.க.5142/2022/டி1 , நாள் 06.10.2022.

*****

ஆணை:

பார்வை 1–ல் காணும் ஆணையத்தின் செயல்முறை ஆணைப்படி, ஆணையர் கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் சரக அளவிலான நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்திட மாவட்ட தேர்தல் அலுவலர்களை ஆணையம் நியமனம் செய்தது.

இந்நிலையில் பார்வை 2–ல் காணும் கடிதத்தின்படி கைத்தறி மற்றும் துணிநூல் துறையானது கைத்தறி துறை மற்றும் துணிநூல் துறை என இருவேறு துறைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதாகவும் துணிநூல் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் திருப்பூர், சேலம், கரூர், மதுரை ஆகிய இடங்களில் மண்டல துணை இயக்குநர் அலுவலங்கள் செயல்பட்டு வருவதாகவும் இவர்கள் நிர்வாக கட்டுப்பாட்டின்கீழ் 6 மத்திய வகை (Central type) கூட்டுறவு நூற்பாலைகள் மற்றும் மாநில அளவிலான தலைமைச் சங்கமான தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் (TANSPIN) சென்னையில் செயல்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பார்வை 1–ல் கண்ட ஆணையத்தின் செயல்முறை ஆணையின்படி ஒருங்கிணைந்த கைத்தறி மற்றும் துணிநூல் துறையைச் சார்ந்த உதவி இயக்குநர்களை மாவட்ட தேர்தல் அலுவலர்களாக நியமனம் செய்து ஆணை வரப்பெற்றுள்ளதாகவும், தற்போது துணிநூல் துறை தனியே பிரிக்கப்பட்டு இயங்கி வருவதால் மத்திய வகை சங்கங்களான கூட்டுறவு நூற்பாலைகள் உள்ளிட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கான

தேர்தல் நடத்துவதற்கு துணிநூல் துறைக்கு மாவட்ட அளவில் மாவட்ட தேர்தல் அலுவலர்களை நியமனம் செய்து ஆணை வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

மேற்க்கண்ட துணிநூல் ஆணையரின் கோரிக்கையினை கவனமுடன் பரிசீலித்து அதனை ஏற்று இணைப்பில் கண்டுள்ள அலுவலர்களை அவர்கள் நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட தேர்தல் அலுவலர்களாக 1988-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகள், விதிஎண்.52-A(4)இன் கீழ் தனக்களிக்கப்பட்ட அதிகாரத்தினை கைக்கொண்டு ஆணையம் ஆணையிடுகிறது.

இவ்வாறு நியமிக்கப்பட்ட மாவட்ட தேர்தல் அலுவலர்கள் நியமனம், அவை தொடர்பாக மாற்று **ஆணை ஏதும் பிறப்பிக்கப்படாத வரை, புதிய நியமன ஆணைகள் ஏதும் தேவைப்படாத,** துணிநூல் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் (Administrative Control) சங்கங்களின் ஒட்டுமொத்த தேர்தல் (Enmasse Elections) மற்றும் அவை தவிர்த்த இதர வகையிலான தேர்தல்கள் (Other than Enmasse Elections) மற்றும் காலியிடங்களுக்கான தேர்தல்கள் அனைத்திற்கும் பொருந்துவதாகும் என்றும் **அவர்கள் மாவட்ட தேர்தல் அலுவலர்களாக தொடர்ச்சியாக இருந்து வருவார்கள் (Shall continue as DEO's) என்றும் அறிவிக்கப்படுகிறது.**

இவ்வாறு விதி எண்.52-A(4)-ன் கீழ் ஆணையத்தால் நியமிக்கப்படும் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் அவ்விதியில் சொல்லப்பட்டபடி தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வை, கட்டளைகள் மற்றும் கட்டுப்பாட்டிற்குட்பட்டு, அவர்கள் சம்மந்தப்பட்ட நிர்வாக கட்டுப்பாட்டின்கீழ் உள்ள கூட்டுறவுச் சங்கங்களை பொறுத்து, வாக்காளர் பட்டியல் தயாரித்தல், வெளியிடுதல் மற்றும் அச்சங்கங்களுக்கான நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் அலுவல் நிர்வாகிகளுக்கான (Members of the Board and Office Bearers) தேர்தல் நடத்த ஒத்துழைத்து மற்றும் மேற்பார்வை செய்தல் வேண்டும் என்பதுடன், ஆணையத்தால் அவ்வப்போது அவர்களுக்கு ஒப்படைக்கப்படும் செயல்பாடுகளை செயற்படுத்துதல் வேண்டும் என்றும் ஆணையம் அறிவிக்கிறது.

இவ்வகையில் இது தொடர்பாக ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள பார்வை 1-ல் காணும் ஆணையத்தின் செயல்முறை ஆணை ரத்து செய்யப்படுகிறது.

ஒம்/-
ஆணையர்

[signature] 6.1.23
ஆணையருக்காக

6/1/23

இணைப்பு : மேற்கண்டவாறு.

பெறுநர்

மாவட்ட தேர்தல் அலுவலர்கள்
(துணிநூல் ஆணையர்/ மாநில தேர்தல் அலுவலர் மூலமாக).

நகல்

1. தலைமைச் செயலாளர், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை–9
2. அரசு முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, சென்னை–9.
3. அரசு முதன்மைச் செயலாளர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை, சென்னை–9.

## இணைப்பு

### ந.க.எண் 875/2022/கூதே1

| வ. எண் | துறை | மாவட்டம் | சங்கத்தின் பெயர் | பதவியின் பெயர் (Designation) |
|---|---|---|---|---|
| 1 | துணிநூல் துறை | மதுரை | அண்ணா கூட்டுறவு நூற்பாலை M.H.161 | துணை இயக்குநர்/மாவட்ட தேர்தல் அலுவலர் |
| 2 | துணிநூல் துறை | | பாரதி கூட்டுறவு நூற்பாலை TNH 101 | |
| 3 | துணிநூல் துறை | | கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை Y-238 | |
| 4 | துணிநூல் துறை | | இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை R.H.153 | |
| 5 | துணிநூல் துறை | கரூர் | புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை | துணை இயக்குநர்/மாவட்ட தேர்தல் அலுவலர் |
| 6 | துணிநூல் துறை | சேலம் | கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை SA 108 | துணை இயக்குநர்/மாவட்ட தேர்தல் அலுவலர் |
| 7 | துணிநூல் துறை | சென்னை | தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் | துணை இயக்குநர்/மாவட்ட தேர்தல் அலுவலர் |

ஒம்/-

ஆணையர்

ஆணையருக்காக

| கூட்டுறவுச் சங்க தேர்தல் 2023 | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் விவரம் | | | | | | |
| துறை : துணிநூல் துறை | | | | | | |
| வ.எண் | துறை | மாவட்டம் | மண்டலம் | பதவியின் பெயர் (Designation) | மாவட்ட தேர்தல் அலுவலரின் பெயர் (திருவாளர்கள்) | கைபேசி எண் |
| 1 | துணிநூல் துறை | சென்னை | ஆணையரகம் | துணை இயக்குநர், துணிநூல் துறை | வி.கி.ஆனந்த குமார் | 94887 22622 |
| 2 | துணிநூல் துறை | சேலம் | சேலம் | துணை இயக்குநர், துணிநூல் துறை | எஸ்.அம்சவேனி | 94439 43450 |
| 3 | துணிநூல் துறை | கரூர் | கரூர் | துணை இயக்குநர், துணிநூல் துறை | செ. தமிழ்செல்வி | 98942 60713 |
| 4 | துணிநூல் துறை | மதுரை | மதுரை | துணை இயக்குநர், துணிநூல் துறை | ச.செந்தில்குமார் | 94435 55581 |